

### ராமேசுவரம் அக்னி தீர்த்த கடற்கரையில்

# பக்தர்கள் ஈரத்துணிகளை போடுவதற்கு வசதி

ராமேசுவரம்,ஆக.13–

ராமேசுவரம் கோவிலுக்கு தினமும் தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இவ்வாறு வரும் பக்தர்கள் முதலில் அக்னி தீர்த்த கடலில் நீராடுவது வழக்கம். அப்போது ஏராளமான பக்தர்கள் தோஷ நிவர்த்திக்காக துணிகளை கடலில் வீசி செல்வார்கள். ஒரு சிலர் கடற்கரையில் ஈரத்துணிகளை அப்படியே போட்டுவிட்டு செல்கின்றனர். இவ்வாறு கடலில் வீசப்படும் துணிகளால் நீராட வரும் பிற பக்தர்கள் சிரமம் அடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் அக்னி தீர்த்த கடலில் நீராட வரும் பக்தர்கள் ஈரத்துணிகளை போடுவதற்கு வசதியாக மாவட்ட கலெக்டர் நந்தகுமார் உத்தரவின் பேரில் பசுமை ராமேசுவரம் திட்டத்தின் மூலம் சுமார் 5 அடி உயரத்தில் 2 பெரிய அண்டாக்கள் அக்னி தீர்த்த கடற்கரையில் வைக்கப்பட்டன. இவற்றை நகரசபை தலைவர் அர்ச்சனன், ஆணையாளர் ஜெயராம் ராஜா ஆகியோர் பார்வையிட்டனர்.

அப்போது விவேகானந்தா கேந்திர பொறுப்பாளர் சரசுவதி, சுகாதார ஆய்வாளர் அய்யப்பன், கவுன்சிலர் மீனாட்சி சுந்தரம், அ.தி.மு.க. நிர்வாகிகள் அன்னகார்ணன், ராஜேந்திரன் உள்பட பலர் உடன் இருந்தனர்.

தற்போது முதல் கட்டமாக 2 அண்டாக்கள் வைக்கப்பட்டுள்ளன. விரைவில் கூடுதலாக பல இடங்களில் வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.